வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

FWC

## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | இந்து சமயம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **01 முதல் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததை இனங்கண்டு அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

01) (1) கணபதி (2) அக்கினி (3) பிரஜாபதி
(4) உருத்திரன் (5) இந்திரன்

02) (1) இராஜசிம்மன் (2) சிவசூடாமணி (3) சங்கரபக்தன்
(4) ரிசபலாஞ்சணன் (5) மாமல்லன்

03) (1) பாசுபதம் (2) கபாலிசம் (3) வீரசைவம்
(4) காஸ்மீரசைவம் (5) சாங்கியம்

04) (1) தாஸ்யபாவம் (2) மதுரபாவம் (3) வாத்சல்யபாவம்
(4) சுகபாவம் (5) சகிபாவம்

05) (1) சிரவணம் (2) மனனம் (3) ஞானம்
(4) நிருத்தியாசம் (5) வழிபாடு

➢ **06 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஒன்றுடனும் பொருந்தாது. அதை இனங்காண்க.**

06) (1) முகம் - விஸ்ணு
(2) கண் - சிவரூபம்
(3) நாபி - பிரம்மரூபம்
(4) வலப்பக்கம் - சூரியரூபம்
(5) இடப்பக்கம் - சிவரூபம்

07) (1) திருவாடுதுறை அதீனம் - நமசிவாய தேசிகர்
(2) தருமபுர அதீனம் - குருஞானசம்பந்த தேசிகர்
(3) மதுரை அதீனம் - சிவஞான தேசிகர்
(4) நல்லூர் திருஞானசம்பந்தர் அதீனம் - சுவாமிநாத ஞானசம்பந்த தேசிகர்
(5) குன்றக்குடி அதீனம் - தெய்வசிகாமணி தேசிகர்

08) (1) ஆண்டாள் - நாச்சியார் திருமொழி
(2) பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி
(3) திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி
(4) நம்மாழ்வார் - திருப்பாவை
(5) குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி

09) *(1)* கந்தபுராணம் - கச்சியப்ப நாயனார்
*(2)* கந்தர் கலிவெண்பா - குமரகுருபரர்
*(3)* மயில் விருத்தம் - அருணகிரிநாதர்
*(4)* பராபரக் கண்ணி - தாயுமானவர்
*(5)* திருப்புகழ் - மாணிக்கவாசகர்

10) *(1)* திருவிருத்தம் - நம்மாழ்வார்
*(2)* பல்லாண்டு - பெரியாழ்வார்
*(3)* திருப்பாவை - ஆண்டாள்
*(4)* திருப்பள்ளி எழுச்சி - தொண்டரடிப்பொடி ஆழ்வார்
*(5)* 1ம் திருவந்தாதி - குலசேகர ஆழ்வார்

➢ ***11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு 'அ' நிரலை 'ஆ' நிரலுடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.***

**11)**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) இராஜராஜன் | A - குடைவரைக் கோயில் |
| (2) மகேந்திரவர்மன் | B - விஷ்ணு சித்தியம் |
| (3) கிருஷ்ணதேவராயர் | C - தஞ்சை பெருவுடையார் |
| (4) சமுத்திரகுப்தன் | D - கங்கை கொண்ட சோழேஸ்வரம் |
| (5) இராஜேந்திரன் | E - அசுவமேதயாகம் |

(1) ACBDE (2) CABED (3) DEACB (4) ABDCE (5) EDBAC

**12)**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) சாலோக முத்தி | A - மாணிக்கவாசகர் |
| (2) சாமீப முத்தி | B - ஜீவன் முக்தர் |
| (3) ஜீவன் முத்தி | C - திருநாவுக்கரசர் |
| (4) சாரூப முத்தி | D - சுந்தரமூர்த்தி நாயனார் |
| (5) சாயுச்சிய முத்தி | E - திருஞானசம்பந்தர் |

(1) ABCDE (2) ADBEC (3) BDAEC (4) CEBDA (5) DACBE

**13)**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) தேவர் அடியார் | A - திருப்பதிக்காணி |
| (2) கோயில் கணக்குப் புத்தகம் | B - ஸ்ரீ பண்டார புத்தகம் |
| (3) பிடாரர்கள் | C - திருமுறை ஓதுபவர் |
| (4) சதுர்வேதி மங்களம் | D - பிராமணர்களின் இருப்பிடம் |
| (5) ஓதுவாருக்கு வழங்கப்படும் காணி | E - கோயிலுக்கு தொண்டு செய்யும் மாதர்கள் |

(1) BCDEA (2) ADCBE (3) EBCDA (4) EABCD (5) EABDC

**14)**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) சைவசித்தாந்தம் | A - உண்டாக்கிய தலங்கள் |
| (2) திருமுறைத் தலங்கள் | B - தேவாரம் ஓதுபவருக்குத் தலைமை |
| (3) மங்கள சாசனம் | C - முப்பொருள் உண்மை |
| (4) வைப்புத்தலங்கள் | D - நாயன்மார்களால் திருமுறை பாடப்பட்ட தலம் |
| (5) தேவார நாயகம் | E - ஆழ்வார்கள் பாடிய திருத்தலம் |

(1) CDEAB (2) BAEDC (3) CDAEB (4) CDBEA (5) DEACB

15)

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| (1) பிரம சொரூபம் | A - வெளிப்பட வடிவம் |
| (2) பியூகம் | B - மேலான வடிவம் |
| (3) விபவம் | C - வழிபடுவதற்குரிய வடிவம் |
| (4) அந்தர்யாமி | D - தோன்றி வந்த வடிவம் |
| (5) அர்சாவதாரம் | E - உள்ளுறை வடிவம் |

(1) ADEBC (2) BADEC (3) BEADC (4) CABDE (5) CDAEB

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு 5 கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றோடு பொருந்தாது. பொருந்தாததை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

16) (1) தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336ல் விஜயநகர பேரரசு நிறுவப்பட்டது.
(2) விஜயநகர அரசர்களில் தமிழ்நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக் கூறுவது மரபாகியது.
(3) விஜயநகர அரசர்களில் முதன்மையானவர் கிருஷ்ணதேவராயர்.
(4) இவரது காலத்தில் நீதியற்ற ஆட்சி இடம்பெற்றதென பயசு குறிப்பிட்டுள்ளார்.
(5) கிருஷ்ண தேவராயரைத் தொடர்ந்து அச்சுதராயர் என்பவர் ஆட்சி செய்தார்.

17) (1) சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர் சித்தராவார்.
(2) ஆன்மார்த்த வழிபாட்டை சித்தர்கள் அறிமுகம் செய்தார்கள்.
(3) பாம்பாட்டிச் சித்தர் ஈழத்துச் சித்தர்களால் குறிப்பிடத்தக்கவர் எனலாம்.
(4) திருமூலர் எழுதிய திருமந்திரம் ஒரு யோக சாதனை நூலாகும்.
(5) சைவ தத்துவத்தின் முதல் நூல்களை தெளிவாக அடையாளம் காட்டிய நூல் திருமந்திரம்.

18) (1) சோழராட்சியில் கோயில்கள் சமுதாயமைய நிறுவனங்களாயின.
(2) பல்லவர் கால பக்திநெறிப் பண்பாடு சோழராட்சியில் நிறுவனமயமாகியது.
(3) வைணவ, சைவப் பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டன.
(4) தொண்டை மண்டலத்தில் ஆரம்பித்த பக்தி இயக்கம் சோழ மண்டலத்திலும் பரவலாயிற்று.
(5) சோழர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை முன்னெடுத்தனர்.

19) (1) இறைவனை வழிபடுவதற்குரிய வழிபாட்டு முறைகளில் காவடியும் ஒன்று.
(2) காவடி முருகப் பெருமானுக்குப் பிடித்த ஆடற் கலைகளுள் ஒன்று.
(3) ஆன்மீக நாட்டத்தையும் பக்தி வைராக்கியத்தையும் விளக்கும் சாதனங்களுள் காவடியும் ஒன்று.
(4) காவடி வன் பக்தியையும் மென் பக்தியையும் வெளிப்படுத்துவது.
(5) பாற்காவடி மென்பக்திக்கும், பறவைக்காவடி வன் பக்திக்கும் எடுத்துக்காட்டுக்களாகும்.

20) (1) பொலனறுவையில் சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச் சிறப்புவாய்ந்த ஆலயம் 2ம் சிவாலயம் ஆகும்.
(2) இவ் ஆலயத்தினை வானவன் மாதேவிஈச்சரம் எனவும் அழைப்பர்.
(3) இவ் ஆலயம் அதிட்டானம் முதல் விமானம் வரையுள்ள ஆலயத்துக்குரிய முழு வடிவமும் கொண்டது.
(4) இதன் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாக காணப்படுகிறது.
(5) வானவன் மாதேவீஸ்வரத்தின் அமைப்பும் அழகும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் அழகிற்கும் அமைப்பிற்கும் ஒப்பானது.

➢ **மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் மூன்று சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்துடன் தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாவிற்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>வடமோடி | B<br>சங்கீர்ணஜாதி | C<br>தேவாரநூல் | D<br>பஞ்சமரபு | E<br>மானசாரம் |
| F<br>வீணாதரர் | G<br>நவசந்திபண் | H<br>அனுமான் | I<br>வெண்கலபடிமம் | J<br>பஞ்சபுராணம் |
| K<br>திருமுறை கண்ட புராணம் | L<br>ஏழிசையாய் இசைப் பயனாய் | M<br>23 பண் | N<br>சலாவிக்கிரகம் | O<br>கோலாட்டம் |

21) விக்கிரக கலையுடன் தொடர்புடைய தொகுதி
(1) EIN (2) AGM (3) BHO (4) DFL (5) EJO

22) பண்ணிசையோடு தொடர்புடைய தொகுதி
(1) AFK (2) DGM (3) CHM (4) DJN (5) DJO

23) பல்லவர்கால இசைக்கலையுடன் தொடர்புடைய தொகுதி
(1) AGL (2) BFL (3) CIN (4) EJO (5) DHL

24) நாட்டார் கலையோடு தொடர்புடைய தொகுதி
(1) AGL (2) CIN (3) AHO (4) DJO (5) DFL

25) திருமுறையோடு தொடர்புடைய தொகுதி
(1) EIN (2) AGM (3) AHO (4) CJK (5) DHL

➢ **சைவசமய வளர்ச்சிப் பிண்ணனியில் ஊடகங்களின் பங்களிப்புக்கள் தொடர்பாக சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 26 - 27 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

A - ஊடகங்கள் மரபுவழிச் சாதனங்களாக ஓலைச் சுவடிகள், முரசறைதல் என்பன செல்வாக்குப் பெற்றிருந்தன.

B - ஊடக வகையில் அச்சுக் கலையில் பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் பருவ இதழ்கள், முக்கிய பங்கு வகிக்கின்றன.

C - நவீன சமய ஊடகங்களாக இணையம், இலத்திரனியல் அஞ்சல், இறுவட்டு என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

D - தொலைத்தொடர்பு சாதனங்களின் பொருள் மரபாக புராண இதிகாசக் கதைகள் நாயன்மார் வரலாறு என்பன இடம்பெறுகிறது.

E - ஊடகங்களின் தன்மைகளாக ஆதாரபூர்வ கருத்துக்களை கொண்டிருத்தல், உண்மைத் தன்மைகளாகவும் நம்பக தன்மையையும் கொண்டிருத்தல் ஆன்மீக பொறுப்புடன் செயற்படுதல் என்பன காணப்படுகிறது.

26) சைவசமயத்தில் ஊடகங்கள் பெரும்பங்கை வகிக்கின்றன என்பதை எடுத்துக் காட்டும் சேர்மானம்
(1) AEC (2) BAC (3) BCD (4) CDB (5) ADE

27) இன்றைய நவீன உலகில் சமய வளர்ச்சியில் ஊடகத்தின் பெரும் பங்கையும் நம்பகத் தன்மையையும் வெளிப்படுத்தும் சேர்மானம்
(1) ABC (2) BCE (3) DEB (4) ACB (5) CDB

- **சம்பந்தர் சுவாமிகள் சிறந்த பக்தியாளர், சாதனையாளர். அவரது சாதனைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 28, 29ம் வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானங்களைத் தெரிவு செய்க.**

A - கடவுளின் அருளால் பல அற்புதங்களை நிகழ்த்தி சைவசமயத்தின் உண்மைகளை நிலை நாட்டினார்.

B - சம்பந்த சுவாமிகளின் இலக்கியமும் சாதனைகளும் சைவசித்தாந்த கோட்பாட்டின் அடிப்படையாக அமைந்தன.

C - பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கி திருநீற்றின் மகிமையையும் கடவுளின் இருப்பையும் நிறுவியவர்.

D - பல்லவர் கால பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்கு பெரும் பங்காற்றியவர்.

E - தனது பிரபந்தங்களின் தொய்மையையும் வாய்மொழி இலக்கிய மரபுகளையும் பயன்படுத்தி அவற்றை மக்கள் மயப்படுத்திய பெருமைக்குரியவர்.

F - உமையம்மையிடமிருந்து ஞானப்பால் அருந்தி 3 வயதிலேயே ஞானம் பெற்று தேவாரம் பாடிய பெருமைக்குரிய நாயனார் ஆவார்.

28) திருஞானசம்பந்த சுவாமிகளின் சாதனைக்குப் பொருத்தமான சேர்மானம்

(1) CEB (2) BCA (3) ADE (4) ACB (5) AEB

29) இறைவன் திருவருளுக்குப் பொருத்தமான சேர்மானம்

(1) CED (2) BCE (3) ADE (4) ACF (5) AED

- **30 - 34 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்பிற்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

30) திருப்படைக் கோயில்

(1) புராதன காலம் முதல் மன்னர்களும் பொதுமக்களும் ஆலயங்களுக்கு தானமளித்து வந்தனர்.
(2) இத்தானம் நிபந்தம் எனவும் மானியம் எனவும் அழைக்கப்பட்டது.
(3) ஈழ நாட்டிலே ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் திருப்படை, தேசத்து என அழைக்கப்பட்டன.
(4) திருப்படைகளைப் பெருமளவு பெறும் கோயில்கள் திருப்படைக் கோயில்கள் எனப்பட்டன.
(5) திருக்கோயில் சித்திர வேலாயுதர் கோயில் திருப்படைக் கோயில் ஒன்றாகும்.

31) வழிபடும் மொழி

(1) இறைவன் என்றும் உள்ளவன் எல்லாம் அறிபவன் எல்லாம் வல்லவன்.
(2) இறைவனை போற்றுதற்குரிய மொழி தேவ பாடையம் சமஸ்கிருதமேயாகும்.
(3) இறைவனை போற்றுதற்குரிய மொழி பிரீதியுடைய தமிழ்மொழியே ஆகும்.
(4) இறைவனை ஏற்றிப் போற்றுதற்குரிய மொழி அவர்தம் தாய்மொழியே ஆகும்.
(5) இறைவனைப் போற்றி வழிபட குறிப்பிட்டதொரு மொழி உரிமையுடைதன்று.

32) திருவிழாவும் நடத்தை மாற்றமும்

(1) திருவிழாவும், விழாவும் ஒரு பொருட் சொற்கள் அல்ல.
(2) இறைவனைப் பற்றி சிந்திப்பதற்கோர் இடமாக திகழ்வது திருவிழா.
(3) பெரும்பாலும் விழாக்கள் இன்பம் தரும் நிகழ்வுகளை இசைவாக்கத்துடன் நிகழ்த்துவனவாகும்.
(4) பக்தனை அவ்வப்பொழுது புறவுலகியல் வாழ்க்கையினின்று விடுபடச் செய்து தெய்வீக பலத்தை பெற வழிகாட்டுவதும் திருவிழாவேயாகும்.
(5) பக்தன் தூய்மை, பக்தி, பலம் முதலியவற்றை பெறுவதுடன் விட்டுக் கொடுத்தல் கூட்டுறவு முதலான சமூகப் பொறுப்புக்களையும் பெற்றுக் கொள்ளவும் திருவிழா இடமளிக்கிறது.

33) பதிகமும் திருவருட்பேறும்
   (1) பத்துப் பாடல்களைக் கொண்டது பதிகமாகும்.
   (2) காப்பிய இலக்கணங்களில் மிகச் சுருங்கிய பொருள் மரபு கொண்ட இலக்கிய வடிவமே பதிகம் ஆகும்.
   (3) பதிகம் பல்லவர் காலத்தில் எழுந்த பிரபந்த வடிவங்களுள் மிகவும் பக்தி பூர்வமான இலக்கிய பூர்வ வடிவமாகும்.
   (4) பதிகம் இறைவன் திருவருட்பேற்றுக்குப் பக்தனை ஆற்றுப்படுத்த வல்லது.
   (5) இறை புகழைச் சிறந்த முறையில் போற்றிக் கூறுவன பதிகங்களாகும்.

34) ஊடகங்களின் பொருள் மரபாக அமையும் இந்து சமய கருத்துக்கள் அடங்கிய தொகுதி
   (1) புராணக்கதை, இதிகாசக்கதை, நாயன்மார் வரலாறு, பண்டிகை
   (2) நாயன்மார் வரலாறு, தினசரி பத்திரிகை, தொலைபேசி, புராணக்கதை
   (3) சஞ்சிகை, இசைப்பாடல், பண்டிகை, நாட்காட்டி
   (4) வானொலி, சமய விழாக்கள், சமய இலக்கியங்கள், ஒளிநாடா
   (5) நாட்டார்கதை, இதிகாசம், புராணம், விளம்பரப் பலகை

➢ **35 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

35) திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாச்சாலையை உருவாக்கி பெரியார்
   (1) ஆறுமுகநாவலர்
   (2) சேர். பொன். இராமநாதன்
   (3) இந்துபோர்ட், இராசரத்தினம்
   (4) சி. த. மு. பசுபதி செட்டியார்
   (5) சுவாமி விபுலானந்தர்

36) இலங்கையில் மின்னேரியா தோப்பவாவியில் வீதியில் அமைந்துள்ள சிவாலயம்
   (1) 5ம் சிவாலயம் (2) 4ம் சிவாலயம் (3) 2ம் சிவாலயம்
   (4) 3ம் சிவாலயம் (5) 7ம் சிவாலயம்

37) கண்ணகி வழிபாட்டின் கொம்புமுறி விளையாட்டின் போது ஆற்றப்படும் நாட்டார் கலை
   (1) கோலாட்டம் (2) கும்மி (3) வசந்தன் கூத்து
   (4) காவடி (5) கரகம்

38) நடராஜர் வடிவத்தில் தீ ஏந்திய கரம் குறிப்பது
   *(1) சங்காரம் (2) திருஷ்டி (3) திரோபவம் (4) ஸ்திதி (5) அனுக்கிரகம்*

39) கோவிந்தசாமி என்ற இளமைப் பெயரைக் கொண்ட சித்தர்
   *(1) பெரியானைக்குட்டிச் சுவாமி*
   *(2) கடையிற் சுவாமி*
   *(3) சித்தானைக்குட்டிச் சுவாமி*
   *(4) நவநாதச்சித்தர்*
   *(5) செல்லப்பா சுவாமி*

40) நம்மாழ்வார் பாடிய திருவிருத்தப் பாடல்களின் தொகை
   *(1) 20 பதிகம் (2) 7 பதிகம் (3) 87 பதிகம் (4) 27 பதிகம் (5) 100 பதிகம்*

41) பஞ்சாட்சர மந்திரப் பதிகம் பாடிய நாயனார்
   *(1) திருஞானசம்பந்தர்*
   *(2) திருநாவுக்கரசர்*
   *(3) சுந்தரமூர்த்திநாயனார்*
   *(4) மாணிக்கவாசகர்*
   *(5) சண்டேஸ்வரநாயனார்*

42) விஷ்ணுக்குரிய தசாவதாரக் கோயில்கள் தோற்றம் பெற்ற காலம்

(1) மௌரிய காலம் (2) குப்தர் காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

43) 20ம் நூற்றாண்டிலே சைவ சமூகத்தின் சமயம், கல்வி, அரசியல் முதலிய துறைகளின் வளர்ச்சியின் பொருட்டு உழைத்த சைவ பெரியார்

(1) சேர். பொன். அருணாச்சலம்
(2) சேர். கந்தையா வைத்தியநாதன்
(3) காரைநகர். ச. அருணாசல உபாத்தியார்
(4) பாவலர் துரையப்பிள்ளை
(5) சேர். பொன். இராமநாதன்

44) இந்து தத்துவங்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படுவது

(1) மீமாம்சை (2) நியாயம் (3) வேதாந்தம்
(4) சாங்கியம் (5) சைவசித்தாந்தம்

45) "உயிர் பிரம்மம் ஒன்றே அதற்கு அப்பால் எதுவும் இல்லை" எனக் கூறும் உபநிடதம்

(1) பிரசன்ன உபநிடதம்
(2) சாந்தோக்கிய உபநிடதம்
(3) கேன உபநிடதம்
(4) தைத்திரிய உபநிடதம்
(5) ஐதரேய உபநிடதம்

46) பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன்

(1) இராஜசிம்மன் (2) மகேந்திரவர்மன் (3) பரமேஸ்வரமன்னன்
(4) செல்லப்பா சுவாமி (5) நந்திவர்மன்

47) சுவாமி முத்தியானந்தர் எனும் திருநாமத்தைக் கொண்ட சித்தர்

(1) யோகர் சுவாமி (2) கடையிற் சுவாமி (3) நவநாதர் சித்தர்
(4) செல்லப்பா சுவாமி (5) சித்தானைக் குட்டி

48) விக்கிரக கலை மரபில் மாநசோல்லாச என்ற நூல் சிறப்பாக கூறுவது

(1) கல்லில் விக்கிரகங்களை உருவாக்கும் முறை
(2) உலோக விக்கிரக வார்ப்புக் கலை
(3) கோபுரத்தில் அமைக்கப்படும் கதை விக்கரக கலை
(4) மரத்தில் சிற்பங்களை உருவாக்கும் முறை
(5) இரத்தினக் கற்களில் சிற்பங்களை உருவாக்கும் முறை

49) "ஆதித்ய ஹ்ருயம்" என்ற நூல் குறிப்பிடும் வழிபாட்டிற்குரிய தெய்வம்

(1) சனீஸ்வரன் (2) வியாழபகவான் (3) சூரியபகவான்
(4) இந்திரன் (5) வருணன்

50) கருவறையில் சிவலிங்கம் விக்கிரக வடிவில் அம்பிகையுடன் கூடி விளங்கும் இலங்கையிலுள்ள சிவாலயம்

(1) திருக்கோணேச்சரம்
(2) முன்னேச்சரம்
(3) நகுலேச்சரம்
(4) திருக்கேதீச்சரம்
(5) வண்ணை வைத்தீஸ்வர சுவாமி கோயில்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | இந்து சமயம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01) "உபநிடதங்கள் இந்து தத்துவக் கோட்பாட்டின் கருவூலம்"
  (i) உபநிடதம் கூறும் தத்துவக்கருத்து
  (ii) உபநிடதம் கூறும் சமய ஒழுகலாறுகள்
  (iii) உபநிடதம் ஆராயும் பிரமம் பற்றி விளக்குக. (5 + 5 + 10 = 20 புள்ளிகள்)

02) சாக்த வழிபாட்டு முறைகளையும், சிறப்பம்சங்களையும் எடுத்துக்கூறி இந்து மதத்தில் இவ்வழிபாட்டுக்குரிய இடம் எத்தகையது எனக் கூறுக. (20 புள்ளிகள்)

03) "சைவத்தின் சித்தாந்தக் கொள்கையை முதன் முதலில் வெளியிட்ட நூல் திருமந்திரம்"
  (i) திருமந்திரத்தின் காலம்
  (ii) திருமந்திரத்தின் பொருள் மரபு
  (iii) திருமந்திரத்தின் சிறப்பு
  (iv) திருமூலரின் பணி (3 + 3 + 7 + 7 = 20 புள்ளிகள்)

## பகுதி II

04) "மகாவிஸ்ணுவின் அவதாரங்கள் தசாவதாரங்கள் எனப்படும்"
  (i) அவதாரம் என்பதன் கருத்து யாது?
  (ii) அவதாரம் எடுத்தலின் நோக்கம் யாது?
  (iii) அவதாரத்தின் வகைகள் எவை?
  (iv) ஆழ்வார் பாடல்களில் காணப்படும் அவதாரக் கருத்துக்கள் (3 + 3 + 7 + 7 = 20 புள்ளிகள்)

05) தமிழ்நாட்டில் நாயன்மார்கள் ஆற்றிய அளப்பரிய சமயப் பணிகளில் சமயமரபு எவ்வெவ் வகைகளில் வளம்பெற்றது என்பதை உரிய உதாரணம் தந்து விளக்குக. (20 புள்ளிகள்)

06) "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
  (i) ஆலயம், கோயில் என்ற சொற்பதங்களிற்கு விளக்கம் தருக.
  (ii) இலங்கையில் பொலநறுவையில் அமைந்துள்ள 2ம் சிவாலயத்தின் சிறப்புக்கள் எவை?
  (iii) திருக்கேதிச்சர ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புக்களைத் தருக. (4 + 6 + 10 = 20 புள்ளிகள்)

07) "பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துசமய வளர்ச்சியில் சைவசமயப் பெரியார்களின் பணிகள் அளப்பரியன"
  (i) 19ம் நூற்றாண்டில் இந்து சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய சமயப் பெரியார்கள் நான்கு தருக.
  (ii) சி.த.மு பசுபதிச் செட்டியார் ஆற்றிய பணிகளைத் தருக. (8 + 12 = 20 புள்ளிகள்)

08) எவையேனும் நான்கிற்கு சுருக்கமான குறிப்பு எழுதுக.
  (i) நாட்டார் கலையில் காவடி
  (ii) வேதகால சமயநிலை
  (iii) இலிங்கோற்பவ மூர்த்தம்
  (iv) பல்லவர்கால கட்டடக்கலை
  (v) சைவபரிபாலன சபை ($5 \times 4 = 20$ புள்ளிகள்)